மாணவர்களுக்கு
ரூ. 6 ஆயிரம் பரிசு!

***மா**ணவ – மாணவிகளே!*

புதிய வகுப்புக்குப் போகப் போகிறீர்கள்! வாழ்த்துக்கள்!

புதிதாகப் புத்தகம் – நோட்டுகள் வாங்க வேண்டுமே? அதற்கு உங்களுக்கு உதவி செய்ய "ராணி காமிக்ஸ்" முன்வந்திருக்கிறது!

புத்தகங்கள் வாங்க 60 மாணவர்களுக்கு தலா ரூ. 100 வீதம் மொத்தம் ரூ. 6 ஆயிரம் கொடுக்கப்படும்.

உங்களுக்கு வேண்டுமா? "வேண்டும்" என்றால், கீழே இருக்கும் கூப்பனை நிரப்பி அஞ்சல் உறைக்குள் வைத்து எங்களுக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் அனுப்பலாம். பரிசுக்கு உரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்து எடுக்கப்படுவார்கள்.

முதலில் ஜூன் 15–க்குள் எங்களுக்கு வரும் கடிதங்களைக் குலுக்கி எடுத்து, 10 மாணவ–மாணவிகளுக்குத் தலா ரூ. 100 அனுப்பி வைக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர், "ராணி காமிக்ஸ்", சென்னை - 600 007.

டியை பூட்டிவிட்டார்.
ல்துறையில் தகவல்
னதும், அவர்கள்
ட பொறித்து குஞ்சு
டவிட்டு வெளியே
வரை யாரும் அந்த
சல் பெட்டியை
கிக்கவேண்டாம் என்று
செய்து, தபால் போட

பர்களை வேறு பெட்டியில் தபால்களை போடும்படியான அறிவிப்பு
ற எழுதி அந்த அஞ்சல்பெட்டியில் ஒட்டிவிட்டார்கள்.
டை பொறித்து குஞ்சு பெட்டியை விட்டு வெளியே வர ஒரு மாதம்
... அஞ்சல்பெட்டிக்கு

ரூ. 6 ஆயிரம் பரிசுபெற்ற மாணவ – மாணவிகள்!

புதிய வகுப்புகளுக்குச் சென்ற மாணவ – மாணவிகள் புத்தகம் – நோட்டு வாங்க உதவியாக "ராணி காமிக்ஸ்" ரூ. 6 ஆயிரம் பரிசு கொடுக்க முன்வந்தது.

ஆயிரக்கணக்கான மாணவ – மாணவிகள் விண்ணப்பித்திருந்தார்கள். மே 15 வரை வந்த கூப்பன்களில் இருந்து 25 பேர் குலுக்கல் முறையில் தேர்ந்து எடுக்கப்பட்டார்கள். அவர்களுக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

பரிசுபெற்ற அதிருஷ்டசாலி மாணவ – மாணவிகள் விவரம் வருமாறு:–

(1) எல். நித்யா, சேலம்.
(2) எம். கோகிலா, குருசாமிபாளையம்.
(3) ஆர்.எஸ். உமாமகேஸ்வரன், காந்திக்கிராமம்.
(4) வே. பேச்சிக்கனி, ஆறுமுகநேரி.
(5) என். அர்ச்சுனன், மொரட்டுப்பாளையம்.
(6) எம். சிவகுமாரன், திருவேற்காடு.
(7) எஸ். விஜயசுதா, திருவோணம்.
(8) இரா. ஜோதிபாசு, மேலகரம்.
(9) எஸ்.பி. ஆறுமுகம், கீழ்ச்சிவல்பட்டி.
(10) ஜெ. மதியரசன், காங்கேயம்.
(11) ந. சிவசுப்பிரமணியன், திருவண்ணாமலை.
(12) ச. பவித்ரா, சென்னை.

வழங்குவதே கவிதை – இன்னும்
ஆழ்ந்துநோக்கின் அடிமனதின்
ஆர்ப்பதிவே கவிதை

வாழ்வை உயர்த்த வரும் கவிதை
வாழ்வதுவோ உறுதி– இந்த
ஆழ்கடல்சூழ் வையமதில்
அதற்கேதாம் இறுதி.

(25) ப. வீரபாகு, சங்கர்நகர்.

அஞ்சல்பெட்டிக்கு விடுமுறை!

பிரிட்டன் வாம்லி நகரில் உள்ள ஒரு அஞ்சல்பெட்டிக்கு விடுமுறை அளிக்கப்பட்டிருக்கிறது.

காரணம்– அந்த அஞ்சல்பெட்டியில் புளுஷட்ஸ் என்ற பறவை கூடுகட்டி முட்டையிட்டிருக்கிறது.

அங்கு வங்கிகளுக்கு தொடர்ந்து நான்கு நாள் விடுமுறை விடப் பட்டிருந்தது. அந்த நேரத்தில் கடிதங்கள் அவ்வளவாக சேருவதில்லை. அதனால் அஞ்சல்பெட்டி காலியாக கிடந்தது. இதை பயன்படுத்தி புளுஷட்ஸ் பறவை அஞ்சல் பெட்டிக்குள் புகுந்து கூட்டை கட்டி முட்டையிட்டு, குஞ்சு பொறிப்பதற்காக அடை காத்துக் கொண்டிருக்கிறது.



தபால்காரர் அஞ்சல் பெட்டியை திறந்தபொழுது பறவை முட்டையிட்டு அடை காப்பதை தெரிந்துகொண்டு, பெட்டியை பூட்டிவிட்டார். அஞ்சல்துறையில் தகவல் சொன்னதும், அவர்கள் முட்டை பொறித்து குஞ்சு கூட்டைவிட்டு வெளியே வரும்வரை யாரும் அந்த அஞ்சல்பெட்டியை உபயோகிக்கவேண்டாம் என்று முடிவுசெய்து, தபால் போட வருபவர்களை வேறு பெட்டியில் தபால்களை போடும்படியான அறிவிப்பு ஒன்றை எழுதி அந்த அஞ்சல்பெட்டியில் ஒட்டிவிட்டார்கள்.

முட்டை பொறித்து குஞ்சு பெட்டியை விட்டு வெளியே வர ஒரு மாதம் ஆகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதுவரை அந்த அஞ்சல்பெட்டிக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது.

நீர்யானைக்கு ஆபத்து!

யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; செத்தாலும் ஆயிரம் பொன் என்று சொல்லுவதுண்டு. காரணம்—அதனுடைய தந்தங்கள். எனவே பலர் காட்டு யானைகளை வேட்டையாடி தந்தங்களை திருடிச் சென்று அதிக விலைக்கு விற்பதுண்டு.

அதைப் போல காண்டாமிருகத்தின் கொம்புகளுக்கும் ஆப்பிரிக்காவில் கடும் கிராக்கி. அதற்காகவே ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ள காடுகளில் யானைகளையும், காண்டாமிருகங்களையும் பயங்கரமாக வேட்டையாடி வருகிறார்கள்.

இப்போது இந்த திருட்டுக் கும்பல் நீர்யானையின் பற்களையும் அபேஸ் செய்யத் தொடங்கிவிட்டார்கள். நீர்யானையின் பற்களைப் பிடுங்கி அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார்கள்.

தாத்தா குரங்கு!

அசு என்ன தாத்தா குரங்கு என்று ஆச்சரியப்படுகிறீர்களா?

அமெரிக்கா கண்டத்தில் இந்த தாத்தா குரங்கு காணப்படுகிறது. இந்த குரங்கிற்கு நீளமான வெள்ளைத்தாடி இருக்கிறது. எனவே இந்த குரங்கை தாத்தா குரங்கு என்று அழைக்கிறார்கள். இது ஒரு விநோதமான குரங்கு இனம் என்பதால் அமெரிக்கா கண்டம் முழுவதும் இந்தக் குரங்கை தேடிப் பார்த்ததில் மொத்தம் ஆறே ஆறு குரங்குகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குரங்குகளை "டிபிராஸா" என்று அழைக்கிறார்கள். இந்த ஆறில் ஒன்றை மட்டும் ஆஸ்திரேலியாவில் உள்ள ட்ராங்கா மிருகக்காட்சி சாலைக்கு கொண்டு வந்து மக்களின் பார்வைக்கு வைத்திருக்கிறார்கள். மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து இந்த அதிசய தாத்தா குரங்கை பார்த்துவிட்டுச் செல்கிறார்கள்.

ராணி காமிக்ஸ் — 335
(மாதம் இருமுறை இதழ்)
ஜூன் 1 — 15
1998

இரகசியச் சாலை

கிஸ்கா, அலுதியான்
டிசம்பர் 1945
கர்னல் பிலிப் என்னைக் கூப்பிட்டாரா? உண்மைதானா?
உண்மைதான் சார்!
U.S AIR FORCE K-4 "BATAAN" SPECIAL UNIT
நேரே ‹ ஏழாவது : கூடாரத்துக்குப் போய் கேப்டன் 'கோல்பி'யை பிடிச்சு இழுத்துட்டு வான்னு சொன்னார்!
ஏன் அப்படிச் சொன்னாரு?
கோல்பி சீட்டு ஆட்டத்தில் தோத்துட்டு மதுவை குடிச்சி மூழ்குவதற்குள் அழைச்சுட்டு வரச்சொன்னார்?
சரி! நான் பார்க்கறேன்.

எனக்கு எப்பவும் தோல்விதான் கிடைக்கும்னு சொல்வாங்க. ஆனால் நான் ஜெயிச்சிட்டேன்! ஹா... ஹா... ஹா...!
கோல்பி கர்னலை சந்திக்க ஓடிவந்தார்.
மிஸ். உங்களுக்கு என் வணக்கங்கள்!
ஓ...! கேப்டன் கோல்பி! வாங்க!
மிஸ்! நீங்க பிலிப்கிட்டே இன்னும் மூணு நாளில் நான் இராணுவத்திலேர்ந்து விடுதலை ஆகறேன்னு சொல்லுங்க!
எனக்குத் தெரியும். உங்க கோப்பு ஒவ்வொரு மேசைக்கும் போறதை பார்த்தேன்!
இந்த விசயமாத்தான் கர்னல் உங்களை பார்க்க விரும்பறார்னு நினைக்கிறேன். உங்களுக்காக காத்திட்டு இருக்கார்.
அப்படியா? நல்லது.
இனிமேல் விசமத்தனம் பண்ண முடியாது!
உள்ளே வாங்க.
வணக்கம் கர்னல் பிலிப் சார்! கேப்டன் கோல்பி உங்கள் உத்தரவுக்கு காத்திருக்கிறேன் சார்!
நாற்காலியில் உட்காருங்க. பேச்சை ஒரு நொடியில் முடிச்சிடுறேன்!
கோல்பி என்னை பற்றி நீங்க கேள்விப்பட்டிருப்பீங்க. நான் உங்ககிட்டேதான் முக்கியமா பேசணும்!

முதல்ல என் சல்யூட்டுக்கு நீங்கள் பதில் தெரிவிக்கல. இராணுவ வழக்கத்தை பின்பற்றுங்க சார்.
நான் ஒரு நல்ல எண்ணத்தோடதான் உங்களை பார்க்கறதுக்கு விரும்பறேன்.
என் மன்னிப்புகள் கேப்டன்! நீங்கள் கடமை தவறாதவர்!
கோல்பி, உங்க ஏமாத்து, விஷமம், சவால் எல்லாத்தையும் நிறுத்திக்கணும்!
இன்னும் 48 மணி நேரத்தில் நீ அமெரிக்காவுக்கு புறப்படப் போற!
நான் சொல்லப் போறதைக் கவனி. உன்னுடைய பிற்கால வேலைக்கு இது உதவும்! நீ துப்பறியும் போலீஸ் ஏஜென்சி வைக்கிறதுக்கு லைசென்ஸ் கேட்டிருக்கே.
இது ஒரு கூட்டு முயற்சி சார். நாங்க இராணுவத்தைவிட்டு போன பிறகு எங்க பணத்தை வைச்சு பார்கோவும்நானும் இதுல முதலீடு செய்றோம். எங்கள் திறமைக்கு ஏற்ற திட்டமாத்தான் இது இருக்கும்!
சரி,.உன் நோக்கம் என்ன? சீக்கிரத்தில் பணம் சேர்க்கணும், பழைய விமானத்தை வாங்கணும், அதை வைச்சுக்கிட்டு ஒரு கம்பெனி நடத்தணும். அவ்வளவுதானே?
கோல்பி எல்லாம் வேடிக்கையா இருக்கு. உனக்கு அதற்கான தகுதி இல்லை!

ஒரு மதுபானக் கடையில்— பார்கோ குடித்து விட்டு ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தான்.
ஆடுவோம், பாடுவோம் கொண்டாடுவோம்! ஆடுவோம் பாடுவோம் விளையாடுவோம்!
ஏய்...! புது பாட்டு போடுங்க. எல்லா பழைய ரிக்கார்டுதானா! சீக்கிரம் கொண்டாடுவோம்!
கேப்டன் பார்கோ உங்களுக்கு ஒரு கவர் வந்திருக்கு!
ஹே...
ஏய்... அது என்னை விடுதலை செய்து ஆபீஸ் அனுப்பிய கடிதம்!
கடைசியில் ஆர்டர் வந்தாச்சு. ரொம்ப சந்தோசம்! கொடுங்க!
இந்தாங்க,
துரதிருஷ்டம்! இன்னும் ஒன்பது நாள் கழித்துதான் விடுதலை!
நீ இப்ப என்ன செய்வே?
கர்னல் அலுவலகத்தில்—
அது என்ன முக்கிய விசயம்?
முக்கியமா உனக்கு ஒரு வாடிக்கையாளன் வேணும்.

உண்மையிலே அந்த வேலை சுவாரஸ்ய மானதுதான்.
உங்க மேலே எனக்கு நம்பிக்கை இருக்கு. இந்தச் சாவியை உன்னுடைய சாவிகொத்துல போட்டுக்க.
இது ஒரு அலாவுதீன் சாவி மாதிரி. திறன்னா திறக்குமா?
யாருக்குத் தெரியும் கோல்பி! நான் சொல்லப்போற இரகசியத்தை நீங்க காப்பாத்தணும்.
இந்த காகிதம், என் சகோதரன்கிட்டே இருந்து வந்திருக்கு. அவன் பெயர் மாஸ்டர்சன். அவனுக்கு சித்த பிரமை
சீக்கிரம் தங்கத்தை கண்டு பிடிப்பேன் என்று இருநூறு கடிதம் எழுதியிருக்கான். ஆனால் இந்தக் கடிதாசி இருக்கே இதுதான் கடைசி கடிதம்! இதுக்கப்புறம் அவன் காணாமல் போயிட்டான்.
அவனை நீதான் கண்டுபிடிச்சு கொடுக்கணும்!
பதினைந்து வருடத்துக்கு முன்னால் என் தம்பி தங்கத்தை கண்டு பிடிக்க ராக்கி மலை அடிவாரத் துக்குப் போனான். அங்கே மோசமான கட்டிடங்கள் இருக்கு! உண்மையில் அது ஒரு பாலைவனம்!
அவன் உங்களைப் போல இருப்பான் இல்லை?
இல்லை. அவன் 140 கிலோ எடை!

அவரை கண்டுபிடித்தால் இரண்டாயிரம் டாலர் தரேங்கிறீங்க!
அது வெறும் செலவுக்கு மட்டும் தான். துப்பறியும் ஏஜென்சி தொடங்கியதும் தனி பில் போட்டு அனுப்புவோம். எங்க முதல் கேஸ் இதுவா இருக்கும்!
பரவாயில்லை! அப்படியே செய்யலாம் கோலபி!
உங்ககிட்டே விலாசம் இருக்கிற தல்லவா?
கடிதாசியை படிக்கிறதுக்கு அது நேரம் கொடுக்கும். நான் விமானத்தில் போகும் போது கடிதத்தை முழுசும் படிச்சிடறேன்!
நீங்க திரும்பி எங்களை பார்க்கும்போது நான் நீங்க சொல்ற இடத்தை வெறும் மோப்பம் தான் பிடிச்சிருப்பேன்! அங்கே செல்வதற்கு அதிக நாள் ஆகலாம்!
ஆச்சரியம். மூணு வருடமா மூணு பேரும் சேர்ந்து ஆகாயத்தில் சண்டை போடுறோம். ஆனால் நாம எப்போ திரும்பி வருவோம்ன்னு தெரியல!
பார்ப்போம். என் தம்பி முன்போல அவ்வளவு பயங்கரமா இருக்கமாட்டான்னு நினைக்கறேன்.
வெற்றிபெறுவீங்க கோல்பி! இந்தத் தடவை இவங்க சங்கடத்தில் மாட்டிக்கப்போறாங்கன்னு எனக்கு மனசுல தோணுது!

கோல்பி பய்ணத்தை தொடங்கினார்.
தம்பி! நீ இராணுவத்திலேயா இருந்தே?
Greyhound Lines
நிறைய பார்த்திருபபியே!
உங்க கண்ணாடி ரொம்ப அழகா இருக்கு! இதே மாதிரி கடைகளில் இருக்கிறதில்லை. ஒருவேளை அடுத்த கிறிஸ்துமஸ்சுக்கு வருமோ தெரியலை!
இது நவீன கண்ணாடி. தாத்தா. அதுமேல கண் போடாதீங்களே. இதுதான் உங்க ஊரா?
ஒரு சிகார் மட்டும் வைச்சுக்கிட்டா போதும், நீங்களும் அவங்க மாதிரி ஆயிடுவீங்க!
இதுவா? இது யாருக்கும் சொந்தம் இல்லை. இங்க போக்கிரி பசங்க இருக்காங்க. நான் ரொம்பதூரம் போறேன். அங்கே எல்லாம நாகரீக ஆட்கள் இருக்காங்க. அது நல்ல இடம்!
சரிதான் தாத்தா. இந்த பஸ் உள்ளே சூடா இருக்கே?
மன்னிக்கணும் கேப்டன். ஏ.சி. பஸ்செல்லாம் வழக்கமான தடத்தில் அனுப்பிடுவாங்க. அடுத்த ஸ்டாப் வருது. அதுல இறங்கினா கொஞ்சம் ஏ.சி.யில் உட்கார்ந்து ஏதாவது சாப்பிட்டுவிட்டு அப்புறம் பயணத்தை தொடங்கலாம்!

இடத்தை பார்த்து ஏமாந்துவிட வேண்டாம். ரொம்ப வசதி இருக்காது!
இன்னிக்காவது அதிருஷ்டம் இருந்தா இங்கே கொஞ்சம் தண்ணீர் கிடைக்கும்!
வாழ்த்துக்கள் மிஸ்டர் டிரிகர்! உங்க ஏ.சி. ஒர்க் பண்ணுதா?
அப்படியில்ல! எனக்கு கார் வேணும் வாடகைக்கு!
நான் கேட்கலை. ஆள் இங்கே வரத்தான் டிக்கெட் வாங்கினாரு!

வெரிகுட்! நாங்களும் இங்கே கிறிஸ்மஸ் கொண்டாட போறோம்!
சமையல் ஆயாச்சா? எடுத்து வைச்சுடலாமா?
ரெடி சார்! ஆனா?
பாட்டைக் கேளுங்க! ரூம்பா! இது கிழக்கு நாட்டைச் சேர்ந்தது. இதைப் பாடினா நீ கட்டாயம் ஆடணும்.
ரொம்ப நன்றி மேடம்!
நான்...!.. ரொம்ப நன்றி
ஓ...! நீங்க ஒருத்தர்தான் வெளியூர்காரரா? இந்தப் பாட்டு ஒரு சிக்னல்! அது பராக்கோவை அழைக்கும் எச்சரிக்கையாய் இருங்க!
நீங்க எப்போதும் வாடிக்கையாளரை எச்சரிக்கை செய்யறது இல்லையே? மற்றவர்கள் என் நாற்காலியில் உட்காருவதை நான் விரும்பறதும் இல்லை. இது உங்களுக்குத் தெரியும்!
பராக்கோ என்பவன் ஓட்டலுக்குள் நுழைந்தான்.

பராக்கோ! அவர் சுற்றுலாக்காரர்! அவருக்கு விசயம் தெரியாது.
சொன்னா மன்னிப்பு கேட்பார்
புரிஞ்சு இட்டீங்களா?
சார்! நான் முதல்லேயே உங்களை எச்சரிச்சு இருக்கணும். இந்த இடம் ஒரு மாதிரி.
ஒண்ணும் பயப்பட வேண்டாம். எல்லாத்தையும் தெரிஞ்சுகிட்டேன். இது பராக்கோ நாற்காலி! அதை திரும்பிக் கேட்கிறார் அவ்வளவுதானே!
அதை ஏன் அப்படி கேட்கிறார்? இது மோசமான நாற்காலி ஆச்சே.
ஆனா... உன்னை ஓட்டல்காரர் தடுத்திருக்கணும்! தடுக்கலை.
இப்போ அதுக்கு வருத்தப்படுவீங்க.
கோல்பி நாற்காலியை எடுத்து பராக்கோவை தாக்கினார்.
ரொம்ப சரி, ஒரு பெட் வைக்கலாம். இப்ப அது நமக்கு நல்ல விளையாட்டா இருக்கும்!
கோல்பியும் பராக்கோவும் மோதிக்கொண்டார்கள்.

ரொம்ப சரி! உனக்கு தன்நம்பிக்கை அதிகம் அதான் என்னை எதிர்க்கிறே!
ஓ...! நான் கையால் அடிக்கிறது பிடிக்கலையா? இப்ப காலால் அடிக்கிறேன், பார்!
ஆ...
போதும், நிறுத்துங்க!
இராணுவத்தாருக்கு வரவேற்பு நடந்திருக்கு.
அவரும் மற்ற பயணிகளைவிட தான் உயர்ந்த வர்னு காண்பிச் சிட்டாரு.
மிஸ்டர்! நில்லுங்க! இந்த இடத்தில் நான்தான் சட்ட ஒழுங்கை பாதுகாக் கிறவன். யாராவது அன்னியங்க இங்கே வந்து கலகம் ஏற்படுத்த பார்த் தால்...!
இங்கே இராணுவ வீரர் வந்திருக்கிறா அவர் ஒன்னும் கலகம் உண்டாக்கலை. இநத பராக்கோதான் வீண் சண்டை இழுத்தான். அவனை கைது செய்யுங்க.

சரி, சரி. எனக்கு நேரமாச்சு போகணும்!
மிஸ்டர்! நீங்க அடுத்த ஊருக்கு போக வேண்டாமா? நான் பஸ்சைக் கிளப்பப் போறேன்
நன்றி! இங்கேதான் நான் தங்கப்போறேன்!
கவலைப்படாதீங்க! இங்கே சுற்றுலா பயணிக்கு எதாவது தீங்கு ஏற்பட்டுச்சுன்னா நாங்கதான் கண்டுபிடிக்கணும்! நீங்க ஒழுங்கா இருந்தா சரிதான்!
மரமண்டை! பெரிய டிரைவர்! போய்யா!
நம்ம விளையாட்டு போ.தும் ஸ்னேக்! ஒரு புல்லட்டை நான் இழந்தாச்சு!
இங்கே என்னை அடிச்ச யாரும் முழுசாப் போன தில்லை!
மன்னிக்கணும். நாம எல்லாம் பழக்க மாயிட்டோம்! கிறிஸ்மஸ் நேரத்தில் வெறுப்பு, விரோதம் வேண்டாம்! நீங்க இங்கேதானே தங்கப் போறீங்க!
எனக்கு அறையைக் காட்டுங்க!
ஒரு இராத்திரிக்கு நான்கு டாலர்! ரொம்ப நாள் தங்கப் போறீங்களா?
எனக்குத் தெரியாது. ஆனா கிறிஸதுமஸ்சுக்கு தங்குவேன். எனக்கு ஒரு வாரத்துக்கு வாடகைக் கார் வேண்டும்!
அப்புறம் நான் எல்லாத்துக்கும் அட்வான்சா பணம் கொடுத்துட்டப் போறேன். என் கணக்கு எப்போதும் முடிஞசதா இருக்கணும சரிதானே!

எனக்கு பியட் கார் வேணும் அல்லது டாட்ஜ் வேணும்.
ஏய் மிஸ்டர்! என்ன நான் சொல்றது கேட்கிறதா?
சரி, சரி! உங்களுக்கு சவர்லே கார் இருக்கு. பரவாயில் லையா?
ஓட்டல்காரன் கோல்பி வைத்திருந்த சாவியை பார்த்து ஆச்சரியப்பட்டான்
என்னுடைய வரம்புக்குள்ள இருந்தால் சரிதான்!
நான் ஏற்பாடு பணறேன்! இந்த பழைய கால சாவி அழகாய் இருக்கு. தொட்டுப் பார்க்கலாமா?
தொட்டுப் பாருங்க! உங்களுக்கு பழம் பொருள் வேணுமா?
யுத்தத்திற்கு முன் நானும் பழைய பொருள் சேகரிச்சிட்டு இருந்தேன். நீங்களும் அப்படித்தானா?
இல்லை. நான் இப்பதான் ஆரம் பிக்கிறேன்
நான் முதல்ல காரைத் தேட றேன்!
அந்தப் பக்கிரிக்கு சவர்லே கார் வேணுமா? அவன் கூட தோஸ்து ஆயிட்டியா?
எல்லாத் தையும் கோல்பி தெரிஞ்சுக்கிறதுக்கு அவருக்கு உரிமை உண்டு. உங்ககிட்டயும் சொல்லப் போறேன்!


என் அருமை சாவியே! நீ கர்னல் வீட்டுக்கு இங்கிருந்துதான் புறப்பட்டு இருக்கிறாய். இப்பொழுது உனது இருப்பிடத்திற்கே நீ திரும்பியிருக்கிறாய்!
உன்னை அவங்க திரும்பி பார்க்கும் போது பழைய ஆர்வம் இருக்காது. அதைப் பத்தி நான் நடந்து போகும்போது சொல்லப் போகிறாய்!
ஆமாமா? இல்லையா?
ஒருவிதத்திலே நீயும் வேணும்! இதுககாகத் தான் நீ யுத்தத்திலேயிருந்து திரும்பி வந்திருக்கே!
சும்மாதான் இப்படி நடக்கப்போகிறேன். அதனாலஓட்டல் காரர்கிட்டே எந்தக் கேள்வியும் இப்ப கேட்ககூடாது. சாவி...! வரைபடம்...!
திடீரென்று கோல்பி அறை திறக்கும் சத்தம் கேட்டது.
கிரீச்...
வாங்க! ரூம்பா! வரும்போதே நல்லா விழறியே!

ரூம்பா வந்த வேகத்தில் கீழே விழுந்தாள்.
என்னை எச்சரித்ததற்கு நான் உங்களுக்கு நன்றி சொல்லலை!
இங்கே வருகிற அந்நியர்கள் எல்லாரையும் அப்படித்தான் சோதிச்சாங்க. ஆனால் உங்களை மாதிரி பராக்கோவை அடிச்சு நொறுக்கினவங்க யாரும் இல்லை. அப்புறம் அந்த சாவி!
ஓ...! சாவி! நீ அதை கதவு துவாரம் வழியே பார்த்தாயே? அது எதை திறக்கும்னு உனக்குத் தெரியும்! அந்தக் கதவு எங்கே?
எனக்குத் தெரியாது. அந்தக் குண்டு மாஸ்டர்சன்தான் வைச்சிருந்தான்! அவன் இப்ப மறைஞ் சாச்சே! அப்புறம் அதை பாதிரிகிட்டே இருந்து ஒருவர் வாங்கிகிட்டாரு!
யார் அவரு?
மலைஜாதிக் காரர்! அவரும் இப்ப இல்லை! சர்ச்சும் இடிஞ்சி கிடக்கு. அப்புறம் உச்சியில் அந்த சமாதி. அங்கே போகாதீங்க. அங்கேதான்...
அப்போது— பராக்கோ அங்கே வந்தான்.
அந்த மடப்பெண் உங்களுக்கு தொந்தரவு கொடுக்கிறாளா?
இல்லை! என அறையை சுத்தம் செய்கிறாள்!
எனக்கு கேமரா வேணும் இந்த இடத்தில் இயற்கை காட்சி எனக்கு ரொம்ப பிடிக்குது.



பசுமையான ஓரோவில் அழிஞ்சாச்சு! அங்கே போனா எல்லாம் புழுதிதான், நீங்க ரியோ பள்ளத்தாக்குக்குப் போகலாம்!
இராணுவ வீரர்களுக்கு உயரமான இடங்கள்தான் பிடிக்கும்!
இந்தக் காரை விமானம்ன்னு நினைச்சுக்காதீங்க. மேலே போக இது ரொம்ப எழும்பும்!
உங்க புத்திமதிக்கு
நன்றி. நீங்களும், பராக்கோவும் அமெரிக்காவில் பிறந்தவங்க தானே?
அதோ பாருங்க! பச்சை முகடு. மூணு மைல் தள்ளி இருக்கு. அந்தப் பள்ளத்தாக்குக்கு இடதுபக்கம் ஓரோவில்ங்கிற இடம் மூணாவது முகட்டிலே இருக்கு. இரண்டு மணி நேரம் காரிலே போகணும்.
அது சீக்கிரமே தெரியப்போகுது! இங்கே சுரங்கம் வெட்ட வந்தவனுக்கு ஒரு சின்ன பள்ளம்கூட வெட்டிக் கொடுக்க மாட்டாங்க. யாரேனும்
இங்கே வந்தா தன்னால்தான் எதுவும் செஞ்சு கிடணும்.
ஒண்ணுமில்லை நண்பரே! அந்த ஆள் என்னவோ வம்பளக்கிறான்!
நன்றி. நான் கண்டு பிடிச்சுக்கிறேன்!
கோல்பி காரில் புறப்பட்டார்...
அவனுக்கு ஏதாவது கிடைக்காட்டி அவன் அங்கே போகமாட்டான். அவனுக்கு நீ என்னதான் கொடுத்திருக்கே?
நீயும், உங்க சுரங்கமும்!

இப்ப நான் முகட்டை தாண்டியாச்சு!
அந்த கவடுன்னு சொன்னாங்களே அது அதோ இருக்கு!
மணி பத்து!
இந்தச் சாலை விசயத்திலேதான் நான் அந்தஸ்னேக் சொல்றதை நம்பறேன். கரெக்டா சொல்விட்டான்!
நான் ஓரோவில் போய் சேர்றதைத்தான் அவன் விரும்புவான்! ஆனா அங்கே நான் எதுக்காகப் போறேன் என்கிறதையும் யோசிச்சிருப்பான்!
ஆனா எனக்கே அதைப்பற்றித் தெரியாது!
பரவாயில்லை. என் யூகம் சரியாத்தான் செயல்படுகிறது.
ஒரு கார் மலைமுகட்டில் வந்துகொண்டிருந்தது.

அந்தக் காரில் ஸ்னேக்கும், பராக்கோவும் இருந்தார்கள்!
நிறுத்து. ஏதோ தெரியுது!
போதும். நீயும், உன் கண்ணும். நிறைய குடிச்சிருக்கே!
சும்மா அலட்டாதே. அந்த முகட்டு மேலே ஒரு வண்டி வருது.
அது யாரா இருக்கும்னு எதிர் பார்க்கிறே?
சாதாரண ஆளா இருக்கமாட்டான். அவன் தன்னை மறைச்சிக்க வேண்டியதில்லை. நாமும் மறைஞ்சிக்க வேண்டாம். இன்னும் மேலே போவோம்.
கோல்பியை ஏன் சுடாமல் விட்டு இருக்காங்க? என்னால் முடியாது.
சமயம் வரும் போது அதை ஒரு விபத்து மாதிரி செஞ்சுடலாம்.
ஓட்டலை விட்டு அவன் புறப்பட்டதை நிறையப் பேர் பார்த்திருக்காங்க!
இரண்டாவது நாம அவனுக்கு அவகாசம் கொடுக்கணும். அவன் தனக்கு வேண்டியதை முதல்லே கண்டு பிடிச்சுக்கட்டும்.
அதைப்பத்தி அவன் நம்மகிட்டே சொல்வான். அப்போ பார்த்துக்கலாம்!
மிஸ்டர் வார்சோ! மாஸ்டர்சன் அனுப்பின கடிதத்தை பார்த்திட்டியா?
பார்த்துட்டேன். நிறைய தவறு செஞ்சிருக்கான். ஏன்?
அவனுக்கு என்னவோ நடந்திருக்கு. இதை படிக்கிறேன் கேளுங்க.

முட்டாள்கள் ஆளுயுத்தில் வெளிச்சத்தை தேடுகிறார்கள். சூரியன் அவர்களை சூடாக்கு கிறான், ஆனால் அறிவாளி களுக்கு இரவி லும் கருமை ஆயிரக்கணக் கான ஒளி களை கக்கு கிறது.
ஏதோ கீதை பழமொழி போல இருக்கு!
இல்லை. கவிதை இது. உன்னாலே புரிஞ்சுக்க முடியலை!
முட்டாள்! இதை எடுத்துக்கோ நாம எல்லாம் ஒரே படிப்பு தான் படிச் சோம்!
கோல்பியும்தான்!
அவனிடமும் கடிதம் இருக்கு. இதில் ஏதோ புதிர் இருக்கு. குருட்டுக் கதவுன்னா என்ன அர்த்தம்? அதே பெயரில் ஓட்டல் இருக்குதா?
அப்படியேதான். இது ஒரு மர்மம்!
பிரமாதம்!
கோர்ட்டையும், டையையும் கழட் டுங்க. எல்லாருக்குமே லெட்டர் வந்திருக்கு. இதை பாருங்கோ பார்கோ, டில்லானி.
ஓ...! மூணு நாளைக்கு முன்னாடியே! விடுதலை!
ஆ...!

மலைமுகட்டில்—
கஷ்டமே! செங்குத்தாக அல்லவா ஏறவேண்டி இருக்கு, எப்படி முடியும்?
நல்ல படிக்கட்டுகள் இருக்கின்றன.
ஸ்னேக் இந்த கடைசிப் பகுதி வழியாக செல்ல மறந்துட்டாரு!
விசித்திரமான இடத்தில் பழையகாலத்து ஆலயம்! இதிலே சின்ன அறை இல்லைனா நான் ஆச்சரியப் பட்டிருக்க மாட்டேன்!
பாட்டும், கூத்தும் கடைங்களும் சேர்ந்தா இந்த இடம் அழகா ஆயிடும். ஆ...! எலி!

அதோ... கதவு இருக்கிறது!
கோல்பி அந்த சாவியை எடுத்தார்.
கதவை திறக்க அவ்வளவு சுலபம் இல்லை!
சாவி போடாமலே கதவு திறந்தது
இங்குள்ள பழங்குடிகளுக்கு பாதிரிதான் நண்பரா இருந்திருக்காரு. இடிபாடுகள் ரொம்ப நாளா இருக்கும் போலிருக்கிறது!
ஓ...! மணிக்கு புது கயிறு!
மணிகூட பளபளன்னு இருக்கே. ஏதோ சரி யில்லையே.
கடவுளே!

மணிக்கு கீழே ஒரு பாதாளக் குழி இருந்தது.
அட கஷ்டமே! பாதிரியாரே உங்கள் ஆவி உலாவுகிறதா?
பாவ மன்னிப்பு கேட்க நான் எங்கே போவேன்? இந்த பள்ளத்துக்குள்ளேயா?
கோல்பி டார்ச்லைட் அடித்துப் பார்த்தார்.
வெறும் கிணறுதான். கீழே எல்லாம் பாறை. தண்ணீரும் இல்லை. எதுக்கு இது?
எதையாவது மறைப்பதற்கு இந்த ஏற்பாடா? ஒரு வேளை மாஸ்டர்சன் இதில் குதிச்சிருப்பாரா?
வெளியே ஸ்னேக்கும், பராக்கோவும் காத்திருந்தார்கள்!
குளிர் அதிகமா இருக்கு! என்ன செய்யப் போறோம்?
இருக்காது. உள்ளே வேற என்னதான் இருக்கும்!
காலை நேரத்துக்குள்ளே சூடு ஏறிடும்.

கோவிலுக்குள்—
நீச்...
நீச்...
எலியாரே! எனக்கு இப்ப ஒரு மாதிரிபுரியுது. இங்கே எல்லாத்தையும் கண்டுபிடிக்கணும்! ஆனா அதுக்கெல்லாம் இரவு நேரம் சரியில்ல. இங்கே இதைத் தவிர நிறைய குழிகள் இருக்கும். அதில் இறங்கி ஏற எனக்கு உன்னை மாதிரி பிடிப்பு கிடையாது!
திரும்ப
வந்தது
பழைய எலியா? புது எலியா? சொல்லு.
எனக்கு ஒரு உதவி செய். என்னைவிட உனக்கு இந்த இடம் தெரியம். நல்லா உனக்கு சாக்லேட்டு, பிஸ்கெட்டு தர்றேன்!
ஆனால் கொஞ்சம் கவனமா இந்த ஆலயத்தை சுத்திப் பார்க்கலாம். இங்கே பாதிரியாரோட சமாதி இருக்குன்னு சொல்லியிருக்கா!
சமாதி இங்கேதான் இருக்கும். நிச்சயம் கண்டு பிடிச்சிடுவேன்!
ஓர் இடத்தில் நிறைய சமாதிகள் இருந்தன.

எலியாரே! மாஸ்டர்சன்னு டைய மிச்சங்களை சாப்பிட வந்தி ருக்கிறாயா?
அந்தப் பெரியவர் இதே கிடக் கிறார் ஆனால் இதை யாரோ திறந்து பார்த் திருக்காங்க!
ஜப மாலை அணிந்திருப்பார் போலிருக்கிறது!
கோவிலுக்கு வெளியே—
கோல்பி உள்ளே என்ன செய் கிறான்?
மெல்லப் பேசு! அவன் பாதிரியை கண்டுபிடிச்சிட்டான்.
அப்பவே ஓட்டையை அடைக்கச் சொன்னேன் கேட்டாயா?
ஆச்சரியமா இருக்கே! அவ்வளவு தூரம் வந்துட்டானா?
நாம் ஆதாரங்களை எல்லாம் மாற்றியாச்சு! ஆ... ஆ...!
முட்டாள் ஏண்டா சிரிக்கிற?
நாம எதை நழுவவிட்டோமோ அதை இந்த கோல்பி கண்டுபிடிக் கணும்!
பேசாமல் இரு! சத்தம் கேட்கப் போகுது!

எலியாரே! அவங்க நம்பளை உளவு பார்க்கிறாங்க! நல்லா தெரியுது.
உஷ்... உஷ்...
நம்ம எப்போ இந்த மர்மத்தை கண்டு பிடிக்கிறோமோ அந்த நேரத்தில அவங்க இங்கே வந்து குதிப்பாங்க!
நாம் அவங்களை ஏமாற்ற வேண்டும்! எந்த இடத்தை நாம் அடையணும் அதை கண்டுபிடி!
ஏய்! என்னை விட்டுட்டு எங்கே ஓடுறே?
உன்னிடம் போய் எல்லாம் சொல்லிட்டு இருக்கேன் பார்!
வெளியே—
எலிகிட்டே பேசறான் அது ஓடறதை நான் பார்த்தேன். முட்டாளா இருக்கானே!
அவன் யார்கிட்ட பேசுகிறான்?
உள்ளே—
அட இதோ இருக்கு. கண்களை தோண்டி எடுத்திருக்கு.

பாதிரியாருக்கு வாரிசு யாருன்னு தெரியலையே? இந்தக் கயிறு பத்து பன்னிரண்டு அடி இருக்குமா?
ஆனா நிச்சயம் நீளமா இருக்கும்!
நான் சாரணரா இருந்திருக்கேன். நிச்சயம் இந்தக் கயிறு எனக்கு உதவும்!
ஆ...! எனக்கு வெற்றி!
கயிறு சுழன்று விழுந்தது.
வெளியே—
அவன் என்ன பண்ணிக்கிட்டு இருக்கான்? உண்மையிலேயே பைத்தியம் தான்!
கொஞ்சம் பொறு. அவன் கயிற்றை வளையத்தில் சேர்க்கிறான்.
ஒரு இராணுவ வீரனுக்கு கடவுள்தான் துணை! இங்கேயும் இப்படித்தான்.
பாதிரியாரே! உதவி செய்யுங்க!

வெளியே—
அவன் எங்கே போனான்?
மாஸ்டர்சன் நிச்சயம் கயிற்றை தொங்கவிட்டு இறங்கி இருக்கமாட்டான்!
ஆனால் பாதிரியாரால் முடியும். எலியைவிட ஒல்லியா இருப்பாரு.
குழிக்குள் போயிட்டான். இந்த இடத்தை பத்து தடவையாவது சுற்றி வந்திருப்போம் வழி நமக்குத் தெரியலையே?
அட்டா! நாம ஏமாந்திட்டோமே!
இப்ப என்ன செய்யலாம்? நாமும் இறங்கலாமா?
அதே கயிற்றிலேயா? நாம் ரெண்டு பேரும் கோல்பியும் சேர்த்தா கனம் தாங்காது!
பாதிரி இந்த ஓட்டைக் குள்ளதான் நுழைந்து அது வழியேதான் அந்த மாஸ்டர்சன் போயிருக்கணும்.
எட்டடியா? ஒன்பதடியா? கடவுளே! இங்கே ஒரு கதவு இருக்கணும். அல்லது ஒரு குகை இருக்கணும்.
அவன் டார்ச் வெளிச்சம் தெரியுது! அவன் இன்னும் கீழே இறங்கிட்டு இருக்கான்.
நிச்சயம் அவனுக்குத் தெரியப்போகுது!

ஓ...! அவன் பைத்தியம் இல்லையா என்ன?
இன்னும் பத்து நிமிடத்திலே அவன் நமக்கு அங்கே உள்ள வழி எல்லாத்தையும் காண்பிக்கப் போறான்!
சும்மா அளக்காதே! அதைப்பற்றி நமக்குத் தெரியும். நாமதான் அதை கண்டுபிடிக்கணும்
ஏய்! மேலே ஏதோ சண்டை நடக்குது! அவங்க ரொம்ப பொறுமை இழந்திருந்தா நானே சீக்கிரம் உண்மையை கண்டு பிடிக்கணும்!
கீழே போய் அவன படப்போகிற அவஸ்தையைப் பாரு!
என்னை தடுக்காதே ஸ்ளேக். அப்படி தடுத்தவங்க என்ன ஆனாங்கன்னு உனக்கு தெரியும்.
உனக்கு இதுலே ஒரு புது தினுசு அனுபவம் கிடைக்கப்போகுது!
அருமை இராணுவக்காரனே நான்தான் பராக்கோ பேசறேன்! நீ இராணுவத்தில் படிச்ச வித்தையெல்லாம் இங்கே பார்க்கப் போறோம். ஹா... ஹா...!
பராக்கோ கோல்பி சென்ற கயிற்றை அறுத்துவிட்டான்
ஏய்...
!
திடீரென்று மலைஜாதியினர் பாய்ந்து வந்தனர்.

கயிறு வெட்டுப்பட்டதும் கோல்பி குழிக்குள் போய்க்கொண்டிருந்தார்.
பாவி! மலை ஜாதிக்காரன் வேற தாக்க வந்திட்டான்!
நான் சொல்றதைக் கேளு. எனக்கு வேண்டியது நல்ல நடத்தை!
சரிதான்! இன்னொருத்தனா உனக்கு வேற தனியா சொல்லணுமா?
நல்ல காலம்! நான் கயிறோட நழுவிதான் விழுந்திட்டேன்! உயிரோடதான் இருக்கேன்!
கோல்பி ஒரு பாறையில் விழுந்தார்.
பராக்கோ! மரியாதையா போயிடு! நான் எல்லோரையும் சுடப்போறேன்!

சுடுங்க! ஏன் தயங் குறீங்க ஸ்னேக்!
அவங்க மண்டியிட்டு பார்க்கணுமா?
உங்களுக்கு எங்களுடைய அருமை தெரியாது நாங்க பயங்கரமா சண்டை போட முடியும்! ஹா... ஹா...!
ஆஹா... ஆஹா...
பராக்கோ இனிமேல் நாங்க பயப்பட மாட் டோம்!
திடீரென்று ரூம்பா அங்கே வந்தாள்.
ஓ...! ரூம்பாவா! நீதான் அந்த மலை ஆட்களை அழைச்சிட்டு வந்திருக்கியா?
மிரட்டல் வேண்டாம். இராணுவக்காரர் வர்றதுக்கு முன்னால் மிரண்டுகிட்டு இருந்தேன்.
இப்பொழுது எதுவும் நடக்காது!
நீ உன ஆட்களை அனுப்பி பாதிரியாரை தேடு. உன்னுடைய கோல்பிக்கும் பாதிரி சமாதி பக்கத்திலேயே ஒரு சமாதி கட்டலாம்!

இழே—
மேலே அவங்க ஒருத்தனுக்கு ஒருத்தன் சண்டை போடுறாங்க. அவங்களை கூப்பிடக் கூடாது. எதிரிகளுக்கு எந்த புத்திமதியும் கொடுக்கக கூடாது!
தவிர எனக்கு வேலை அதிகமா இருக்கு. இது எங்கே போகிறது?
பார்க்கலாமே!
சராக்...
அடடே! குகை போல என்னமா தோண்டி இருக்காங்க!
இதை தோண்டறதே பெரிய வேலைதான்!
இது என்ன தொலைபேசி வயரா?

பாதிரியும், மாஸ்டர்சனும் இருக்கிறவரைக்கும் மலைஜாதி யினருக்கு மதிப்பு நிச்சயம் கிடைக்கும்னாங்க. இப்ப இரண்டு பேருமே இறந்து போயாச்சு!
வேலைக்காரப் பொண்ணு அதுவும் சமையல்காரி உபதேசம் பண்றா. கேட்டுக்குங்க!
பழிவாங்கப் போறியா? எல்லோரையும் உடனே கொன்னுடு.
ஏய்! உனக்கு மட்டும் பேசிக்கோ!
அப்புறம் அந்த இராணுவக்காரர் கோல்பி வந்தாரு. அவர் எங்க கட்சி. அவரையும் நீங்க கொன்னுட்டீங்க. உங்களை— பழிவாங்கணும் தான் ஆனா பாதிரி யாருடைய குரல் என் காதிலே ஒலிச்சிட்டுருக்கு!
?
நல்லது. எதிரிக் குத்தான் அதிக சாதகம்னு நினைக் கிறேன். ஆனா அதோ என் முன்னால. அது கூர்மையான அரம்!
பொறாமையையும், கொடூரத்தையும் விட்டுட்டா நீங்கதான் எல்லாரையும் விட உயர்ந்தவங்களா இருப்பீங்கனு சொன்னார்.
ஏய்! துப்பாக்கிங்க.
மலைஜாதிக்காரன் அவர்கள் துப்பாக்கியை குழிக்குள் போட்டான்.
மேலே இருந்து துப்பாக்கிகள் விழுவதை கோல்பி கவனித்தார்.

இராணுவ முகாம்—
ஆமாம். என்கிட்டே இன்னும் ஒரு கெலிகாப்டர் இருக்கு. அதை நீங்க வாடகைக்கு எடுக்க விரும்பினா எந்தக் கேள்வியும் கிடையாது என் நண்பர்களே! இன்னும் உங்க ஆயுதங்களை எல்லாம் திருப்பிக் கொடுக்கலை.
உங்களுக்கு மெடல் இருக்கு, பேட்ஜ் எல்லாம் இருக்கு.
ஆமாம் சார்! இன்னிக்கு பாதி இராத்திரி வரைதான் எல்லாமே! அப்புறம் நாம சாதாரண உடைக்கு மாறிடுவோம்.
இருந்தாலும் வீரர்கள் கிடையாது. என்னுடைய சகாக்களே!
முதல்ல படை அலுவலகத்திலேயிருந்து கட்டளை வரட்டும். அதற்குப்பிறகு கெலிகாப்டரை நாங்க வாடகைக்கு எடுக்கறோம்!

இங்கே இருந்தே ஹெலிகாப்டரை எடுக்கப்போறீங்கன்னா பாதுகாப்பு அறையில் இருந்து பச்சை சிக்னல் கிடைக்கணும்!
இன்னும் ஒரு மணி நேரத்தில் நாம் பூமிமேல் பறந்திட்டு இருப்போம்!
டாக்ஸ் அதோ எல்லாம் தயாராக இருக்கு!
எந்திரங்கள் பிரயோஜனம் இல்லை. இருந்தாலும் அதை வைச்சு ஓட்டிட முடியும்!
ஒரு கிறிஸ்மஸ் நாள் காலை—
இது என்ன? அவன் என்ன செய்யறான் மேலே?
உலகத்தில் எல்லாருமே கலங்கிடுவாங்க. குறிப்பா குடும்ப தொந்தரவு அன்னிக்கு இருந்ததுன்னா!
இருந்தாலும் எனக்கு கர்னல் சாதகமாக இருப்பார்ன்னு நினைக்கவே இல்லை!
இன்னிக்கு சாயங்காலம் கோல்பியை சந்திக்கிறேன்னு சொல்லி இருக்கார் அதுக்காகவாவது எல்லாம் ஒழுங்கா நடக்கணும். ரைட். இஞ்சினை கிளப்பு!
42, 43 ஓயர் மட்டம் 30விட கம்மியா இருக்கு!

மாஸ்டர்சன் போல் 51 ஐ முழுசா எண்ணியாச்சு!
கிளாக்...!
நல்லது. ஒரே ஒரு நிமிடம் என் டார்ச்சை எடுக்கிறேன்!
இந்த டார்ச்... என் கண்ணையே நம்ப முடியலையே?
இயற்கையான சூரிய வெளிச்சம்! இந்த அறையை மலை ஆட்கள் பாது காப்பிற்காக உண்டாக்கி இருப்பார்கள் போலிருக்கு!
எவ்வளவு ஆழமா இருந்தாகூட அவங்க கண்ணாடியை ஒவ்வொரு இடத்திலேயும் பதிச்சு அதிலே பிரதிபலிக்க வைச்சு சூரிய வெளிச்சத்தை உள்ளே கொண்டுவந்துடுவாங்க. அதோ ஒண்ணு பிரகாசிக்கிறது!

ஐயோ! இது என்ன ஏமாத்து வேலை. என் கண் இதுக்குள்ள எரிஞ்சுபோயிருக்குமே. நல்லவேளை தப்பிச்சேன்!
ஐயோ கஷ்டமே!
மயிரிழையில் தப்பிச்சேன். இப்போ நினைவு வருது. மாஸ்டர்சன் தன்னுடைய சகோதரனுக்கு கடிதம் எழுதி இருந்தானே. "ஆகாயத்தை பார்க்கும்போது முட்டாள்கள்தான் வெளிச்சத்தை தேடுகிறார்கள்.
அவர்கள் கண்களை சூரியன் குருடாக்குகிறது". கடவுளே, அவன் ஒண்ணும் ஜோக் பண்ணலை.

இது ஒரே கண்
உள்ள குருட்டு
கதவு!
இது ஒண்ணும்
விளையாட்டு
விசயம்
இல்லே!
இங்கே ஏதும்
பொறி
இருக்காது!
பின்னாடியும்
ஏதுவும் இல்லை.
வெறும் பாறைதான்.
அதனால் எல்லாமே
இரகசியம்தான்!
சாவியையும்,
அதன் பூட்டையும்
கண்டுபிடிக்
கிறதுதானா
இரகசியம்!
?
அட
கடவுளே!
மாஸ்டர்சன் மலை
மக்களைவிட ரொம்ப
தைரியத்தோட
இருந்திருக்கார்!
என்னன்னு
கவனிக்கிறேன்.
கதவைத் திறந்த கோல்பி
அதிர்ந்துபோனார்.
அங்கே தரை இல்லை.

வெறும் இருட்டுக்குள்ளே ஒரு கதவு! அது இருட்டுக்குள்ளேதான் போகிறது!
இந்த ஏமாத்து வேலை எதற்கு?
கண்டுபிடிச்சிட்டேன்! இந்த இருட்டில் கதவுதான் ஒரு ஊஞ்சலுக்கு கதவாக இருந்திருக்கிறது!
பாதிரிக்கும், மாஸ்டர்சன்னுக்கும் இந்த தடம்தான் கிடைச்சிருக்கு! குறிப்பா வெளிப்பக்கம் போறதுக்கு. ஆனா நான் வேற வழியாத்தான் வந்திருக்கேன்! அந்த ஊஞ்சல் வசதியா இருக்கும்!
இது திறந்தவெளிக்கு போகலை! இதுவும் மர்மம்தானா?
நல்லவேளை! நமக்கு மாஸ்டர்சன் கடிதம்தான் உதவியா இருக்கு!
அந்த குருட்டுக் கதவு ஆறு மணி நேரத்தில் 1000 நெருப்புகளை உண்டாக்கும் அறிஞர்களுக்கு.

எதுக்காக ஆறு மணி நேரம்! பொறுமை போயிடுமே
?
இப்ப எனக்கு தோணுது. அந்த மாஸ்டர்சன் கடிதத்தை ஏப்ரல் ஒண்ணாம் தேதி இந்த இடத்தில்தான் எழுதியிருக்கணும்.
இன்னொரு கண்ணாடியும், அதை தொங்கவிடறதுக்கு ஒரு ஆணியும்!
ஒத்தைக் கண் கதவு எதை மறைக்குது?
4—ந்தேதி ஏப்ரல் 6 மணி. அதுதான் கோடை காலம்!
நான் சந்திப்பை இழந்தாலும் இழப்பேன் இப்போ ஆயிரம் நெருப்பு வர நேரமாச்சு!
அட என் கஷ்டமே. இது என்ன?

கெலிகாப்டர் பறந்து வந்துகொண்டிருந்தது.
ஓ...! ஜெரிக்கோ ஒட்டலா! இந்த இடத்துக்குத்தான் கோல்பி போனானா?
ஆமாம். கர்னல் இதைத்தான் சொன்னார்!
ஓ...! இங்கேதான் கோல்பியை பிடிக்கணுமா? பெரிய இடமா இல்லையே?
முனகாதே. அதோ பாரு நம்மளை வரவேற்க ஆள் வந்தாச்சு.
இப்ப புரிஞ்சதா?
இதைத்தான் ஒரோ வில்ன்னு சொல்லுவாங்க. இங்கே சிலருங்க கோல்பியோடு ஒத்துழைக்கிறதா சொல்லி இருக்காங்க. ஆனா உண்மையில் அவங்க விரோதிங்க!
எங்களை 107 வருடம் வைச்சு இருக்கப் போறீங்களா? எதுக்கு காத்து இருக்கீங்க!
அவங்க பெரிய மந்திரவாதிங்க உள்ளே போன கோல்பி நிச்சயம் வெற்றியோடு வெளியே வருவான்னு இந்த முட்டாள்கள் நினைக்கிறாங்க!
முட்டாள்கள்னு சொன்னது ரொம்ப சரி! ஆனா இந்த மலை ஆட்கள் அப்படி இல்லை!

ஓட்டல்காரரா! நல்லவேளை தப்பிச்சோம்!
ரொம்ப துள்ளாதே! நம்மை ஏதாவது செய்யப் போறாங்க!
எதுவும் செய்யாதிங்க. அவர் நாய்களை கொண்டுவந்து இருக்கிறார் அவை குதறி எடுத்திடும்!
ரும்பா! உனக்கு ரொம்ப யூகம் இருக்கு! ரொம்ப காலமா மலைஜா திங்க புதைச்சு வைச்சிருந்த பொக்கிசத்தை பாதிரியார் கண்டு பிடிச்சார்ன்னு சொல்லிட்டு இருந்தே!
அதை இந்த பாதிரியார் மாஸ்டர்சன் என்பவரை கூப்பிட்டு தோண்டிப் பார்க்கச் செய்தார்!
பொக்கிசத்து இலலை. இரகசிய எல்லாம பாதுகாப்பா வைச்சான் எதையும் கண்டுபிடிக்க யாதபடி செய்தான!
சிக்கிரம் அவன் செத்துப் போயிட்டான். பாதிரியும் செத்துப் மீதி பாதுகாப்பு வேலையெல்லாம் சன்தான் ஆனா பொக்கிசத்தைத் தொடலை.
நான் பொக்கிசத்துக்காக காத்திட்டு இருக்கும்போது பராக்கோவும், அவனுடைய சகாவும் இறங்கிட்டாங்க. அதுதான் பிரச்சினை!

கோல்பி ஊஞ்சலில் ஒரு மூட்டையுடன் ஏறினார்.
ஒரு நல்ல செய்தி காப்டன். உன்னைப் பார்த்தா ஆரோக்கியமா இருக்கே. நீங்க இங்கே இருப்பீங்கன்னு தெரியாது. உங்களை திரும்பிப் பார்ப்போம்னு நினைச்சதே இல்லை!
நல்ல அதிசயம்! ரொம்ப நாளுக்கு அப்புறம் திரும்பி பூமியைப் பார்கக நேர்ந்தா வானத்து வர்ணம் ரொம்ப அதிசயமாக இருககும்!
ஏய்! நீ போசாமல் கிட! அவர் எங்களுக் காக உதவ வந்தி ருக்கிறார்!
ஆ! ஏராளமான தங்கம், சுத்தமான தங்கம்!
குறிப்பா அங்கே இருக்கிறது எல்லாம் பரிசுத்த பொருள்னு சொல்றாங்க! ஓட்டல்காரரே! நான் உபயோகம் இல்லைன்னு நினைக்காதீங்க. நான் உங்களுக்கு தேவை!
ஆமாம். ஆமாம். ஆனால்...!
திடீரென்று ஓட்டல்காரன் சுட்டான்.

யாரு? ஸ்னேக் பராககோ இரண்டு பேருமா? பயங்கரம்!
இவங்க இரண்டு பேரும் 'மாஸ்டர்சன்னை' துன்புறுத்தி இருக்காங்க. அதனால் இவங்களை தூக்கி பள்ளத்துல தள்ள வேண்டியதுதான்.
கோல்பி நீ கீழே போகணும். பொக்கிசத்தை சின்ன சின்ன பொட்டலமாக கட்டி ராட்டை வழியே மேலே கொண்டு வா ஏதாவது தவறு நடந்தது ரும்பாவுக்கு ஆபத்து நினைவு வைச்சுக்கோ!
நான் சொல்றபடி நடந்தால் எல்லோருக்கும் விடுதலை கிடைக்கும்!
நீ சண்டையை விரும்பறியா? அல்லது சமாதானமா?
முந்நூறு வருடத்துக்கு முன் ஒரு வெள்ளைக்காரன் தங்கத்தைத் தேடிவந்தான். எல்லாரையும் இரக்கமில்லாமல் கொன்னான்.
அட கடவுளே! இந்த ஆசாமி இவனை தீர்த்துடப்போறான்
திடீரென்று மேலே சத்தம் கேட்டது. கோல்பி மேலே பார்த்தார்.
ர்ர்..ர்.. ர்... ர்ர்....ர்...

அது என்ன?
இராணுவ அணியைச் சேர்ந்த கெலிகாப்டர் வருது!
அங்கே பார்த்தீங்களா? ஏற்கெனவே இரண்டு பேர் செத்து தரையில கிடக்குறாங்க. நான் என்ன செய்யணும்!
நீ ஒரு பக்கமா போ! எதிராளிகளை நான் பந்தாடப் போறேன்!
அந்த விமான பைலட் தனியா வரலை! பைத்தியம்தான் பிடிச்சிருக்கு.
ஓட்டல்காரன் கெலிகாப்டரை நோக்கி சுட்டான்.
ஏய்! அவனுடைய ஆத்திரத்தைப் பார்த்தாயா?
எச்சரிக்கை! நாய்கள் வருது!

நாசமாப் போச்சு. நான் துப்பாக்கியால கூர்மையா சுட முடியும்னு நிச்சயம் நிரூபிக்கப் போறேன்!
ரூம்பா!
ஐயோ!
ஏய்! நீ அடிபட்டுட்டியா?
கடவுளே! கெலிகாப்டரிலிருந்து குண்டு போட்டுட்டான். இந்த பாவி நாய்ங்க என்னை எஜமானன்னு புரிஞ்சுக்காமல் என் மேலே பாய வருது.
ஆ...
என்னைக் காப்பாத்துங்க.
ஓட்டல்காரன் கையில் இருந்த குண்டு தவறி விழுந்தது.
டமார்...!
என்ன நடந்ததுன்னு அப்புறம்தான் தெரியப் போகுது. இந்த ஆசாமி அவங்கள்ல ஒருத்தரா
இருந்திருக்க மாட்டார்!
நாய்களுக்கு வெறி ஏறி இருக்கு. ஆனால் இரக்கம்தான் படணும். மனிதனைவிட நாய்களை நம்பலாம்.

இந்த பொக்கிச அறையில் பாதிரியாருடைய உயில்!
இந்த உயிலில் மாஸ்டர்சன்னும் கையெழுத்து இட்டு இருக்கிறார். அவரும் அதற்கு இசைவு தெரிவித்து இருக்கிறார்!
JERICHO'S
043
இதனால் தான் அரசாங்கத் துக்கும் அதன்மேல அதிக ஆசை இல்லாமல் போயிருக்கு!
நாம இந்த வேலையில் நுழையறதுக்கு முன்னாடி நம்ம வழியெல்லாம் சரி பண்ணணும்!
தேசிய நீரோட்டம்னு! அது நன்மை ஆனாலும் சரி, தீமையானாலும் சரி கலந்துடு வாங்க!
போலீஸ் நமக்கு உதவி செய்வாங்க. அரசாங்கத்துக்கும் நிரந்தர வருமானம் கிடைக்கும். இதுல இருக்கிற இரகசிய அறைகள், அதுல இறந்து போனவங்க எல்லாமே பழைய நினைவுகள்தான்!
எங்க மக்களும், நீங்களும் என்ன சொல்வீங்களோ...
எங்கள் மலை இனத்தவர்களுக்கு இது பெரிய விடுதலை நாள். ஆகாயத்திலிருந்து இராணுவம் வந்ததினாலதான் இனிமையான கிறிஸ்மஸ்!
முட்டை, கேக், பிஸ்கெட் எல்லாமே கொண்டாட்டம்தான் இந்த கிறிஸ்மஸ்லே!
வாங்க எல்லோரும் சாப்பிடுவோம்!
அதுமட்டுமல்ல; மாஸ்டர்சனின் நினைவாகவும், நாம ஆரம்பிக்கப்போற கம்பெனியோட தொடக்க விழாவாகவும் இதை கொண்டாடுவோம்!
(முடிந்தது)

புதிய சிறுவர் தொடர்கதை



முன்னொரு காலத்தில சொர்க்கபுரி என்று அழகிய நாடு ஒன்று
இருந்தது. அந்த நாடு பெயருக்கு ஏற்ப சொர்க்கபுரியாக திகழ்ந்தது.
நாட்டைச் சுற்றிலும் மலைகளும், காடுகளுமாக பச்சைபசேல் என்று
செழித்து இருந்தது. வானம் தவறாமல் மும்மாரி பொழிந்ததால்
ஆறுகளும், குளங்களும், கழனிகளும் நிறைந்து வழிந்தன. நெல்
பயிர்கள் செழித்துக் குலுங்கின. அதனால் மக்கள் கவலையறியாது
மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார்கள்.

அப்படிப்பட்ட சொர்க்கபூமியை சேதுபதி என்ற மன்னர் ஆண்டு
வந்தார். அவர் மக்களிடத்தில் நிறைய மரியாதை வைத்திருந்தார்.
இல்லை என்று வந்தவர்களுக்கு எல்லாம் பொன்னும் பொருளுமாக
அள்ளிக் கொடுத்தார். அதனால் மக்களும் மன்னர் மீது அளவிட
முடியாத பாசம் வைத்திருந்தார்கள்.

சேதுபதியின் திறமையான ஆட்சியைக் கண்டு அண்டை நாட்டு
மன்னர்கள் எல்லாம் பொறாமைப்படுவார்கள். அந்த அளவுக்கு
நல்லாட்சி புரிந்தார். அவருடைய வீரத்தைக் கண்டு பகைவர்கள்
மிரண்டு போவார்கள். போர்க்களத்தில் இறங்கிவிட்டால் இவருடைய

வாள்வீச்சை கண்டு புறமுதுகுகாட்டி ஓடியவர்கள் ஏராளம். ஆனால் எதிரிக்கு கூட துரோகம் நினைக்காத இளகிய மனம் படைத்தவர், சேதுபதி.

அப்படிப்பட்ட சேதுபதிக்கும் ஒரே ஒரு குறை இருந்தது. அவருடைய மனைவி கோமளதேவி ஒரு மகனை பெற்றெடுத்து மன்னர் கையில் கொடுத்துவிட்டு இறந்து போனதைத்தான் அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மனைவி மீது உயிரையே வைத்து இருந்தார். ஈருடல் ஓர் உயிராய் வாழ்ந்து வந்தார்கள்.

திருமணமாகி ஐந்து ஆண்டுகள் வரை அவர்களுக்கு குழந்தை பிறக்கவில்லை. அவர்கள் வேண்டாத தெய்வம் இல்லை. சுற்றாத கோயில்கள் இல்லை. பார்க்காத மருத்துவம் இல்லை. முடிவில் ஐந்து ஆண்டுகள் கழித்துத்தான் அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு பார்த்திபன் என்று பெயர் சூட்டி பலூட்டி சீராட்டி வளர்த்தார்கள்.

பார்த்திபனுக்கு ஒரு வயது இருக்கும்போது, திடீரென்று கோமள தேவிக்கு நெஞ்சுவலி வந்து இறந்து போனார். மன்னர் சேதுபதி கோமளதேவியை இழந்து, பார்த்திபனை வைத்துக்கொண்டு தவியாய் தவித்தார். மறுமணம் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் கோமள தேவியின் நினைவாகவே வாழந்து வந்தார்.

அப்போதுதான்— பார்த்திபனை கவனித்துக்கொள்வதற்காக சுந்தரவல்லி என்ற பணிப்பெண்ணை சேதுபதி நியமித்தார். அவள் தான் பார்த்திபனுக்கு சோறூட்டி தாலாட்டி தூங்க வைப்பது எல்லாம். அவள் அரண்மனையின் அந்தப்புரத்தில் பார்த்திபனுடனே தங்கி இருந்தாள்.

சுந்தரவல்லி சரியான வில்லி. இடையிடையே ம்ன்னருக்கும் சேவை செய்யத் தொடங்கினாள். சோழியன் குடுமி சும்மா ஆடுமா? சம்சாரியை பறிகொடுத்து விட்டு பிரம்மச்சாரியாக வாழும் மன்னனை தன் அழகை வைத்து இலேசாக அசைத்துப் பார்த்தாள். மன்னரிடம் ஆசை வார்த்தையை கொட்டி அவருடைய கல்மனதை மெல்ல மெல்ல கரைய வைத்தாள்.

மன்னரும் அவளுடைய அன்பிலும், பரவசமான பேச்சிலும், அழகிலும் கொஞ்சம் கொஞ்சமாக மயங்கி அவள் விரித்த வலையில் விழத் தொடங்கினார்.

எப்படியும் பார்த்திபனுக்கு ஒரு தாய் வேண்டும் என்று மற்றவர்கள்

எடுத்துச் சொன்னபொழுதெல்லாம், அதை அலட்சியமாக தட்டிக்
கழித்த மன்னர் இன்று சுந்தரவல்லியின் கைப்பொம்மையாக
மாறிப்போனார். இருவரும் தனிமையில் இரகசியமாக சந்திக்கும்
அளவுக்கு வளர்ந்ததும், மன்னர் அவளையே இரண்டாம் தாரமாக
மறுமணம் செய்துகொண்டார். அப்பொழுது பார்த்திபனுக்கு
இரண்டு வயது நிறைந்திருக்கவில்லை.

மன்னர் சுந்தரவல்லியை மறுமணம் செய்வதற்குமுன் அவர்களுக்குள்
ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அதாவது, "நாம் திருமணம்
செய்துகொண்டால் நமக்கு குழந்தை பிறக்கக்கூடாது. பார்த்திபன்

தான் நமக்கு குழந்தை" என்று மன்னர் சுந்தரவல்லியிடம் தன் நிபந்தனையை எடுத்துச் சொன்னார்.

அரண்மனைப் பணிப்பெண்ணான சுந்தரவல்லிக்கு ராஜ வாழ்க்கை கிடைக்கும்போது கசக்கவா செய்யும். உடனே ஒப்புக் கொண்டாள். மறுநாளே திருமணமும் முடிந்தது.

திருமணம் முடிந்த கொஞ்ச நாளிலேயே சுந்தரவல்லி தன் சுயரூபத்தை காட்டத் தொடங்கினாள். அவ்வளவு நாளும் பார்த்திபனை தன் சொந்த பிள்ளை போல பராமரித்து வந்தவள் திடீரென்று அவனை வெறுத்து ஒதுக்கத் தொடங்கினாள். அரசி என்ற ஆணவம் அவள் மனதில் கொளுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றுவது போல அவளுடைய அண்ணன் பூபதியும் தங்கையுடன் அரண்மனைக்கே வந்துவிட்டான். வந்தவன் அவ்வப்பொழுது சுந்தரவல்லிக்கு தூபம் போடவும், பார்த்திபனை இல்லாமல் செய்துவிட்டால் மன்னனுக்குப் பிறகு சொர்க்கபுரி சுந்தரவல்லிக்கே வந்துவிடும் என்று அவளிடம் ஆசை காட்டினான்.

இது போதாதா சுந்தரவல்லிக்கு. மனதில் ஆயிரமாயிரம் ஆசைகளுடன் மன்னனை ஆட்டிப்படைக்கத் தொடங்கினாள். மன்னரும் வேறு வழியில்லாமல் மகுடிக்கு அடங்கிய பாம்பு போல செயல்பட்டார். மக்கள் மீது அநியாயமான வரிகளைப் போடச் சொல்லி மன்னரை நெருக்கினாள். மன்னரும் அவள் சொன்ன சொல்லுக்கு மறுப்பு ஏதும் சொல்லத் தெரியாமல் மக்கள் மீது வரிகளைப் போட்டார்.

மன்னரின் திடீர் மனமாற்றத்தைக் கண்ட மக்கள், மன்னர் மீது வைத்திருந்த மரியாதையை இழந்தார்கள். விவசாயிகள் பெருத்த நட்டத்துக்கு ஆளானார்கள். கூட இருந்த அமைச்சர்களாலும் எதுவும் செய்ய இயலவில்லை. அந்த அளவுக்கு அமைச்சர்களை ஆட்டிப் படைத்தாள், சுந்தரவல்லி.

மன்னர் அடியோடு மாறிப்போயிருந்தாலும், தன் மகன் பார்த்திபன் மீது வைத்திருந்த பாசத்தில் ஒருநாளும் குறை வைக்கவில்லை. அவன் கல்வி கற்க ஒரு குருநாதரை ஏற்பாடு செய்தார். அதுபோல வாள்வீச்சு, வில் எய்தல், ஈட்டி எறிதல், யானை ஏற்றம், குதிரை ஏற்றம் போன்ற போர் கலைகள் அனைத்தையும் கற்றுக்கொடுக்க தவறவில்லை.

நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக பார்த்திபனும்

வள; ந் தொடங்கினான். குருநாதர் சொல்லிக் கொடுத்த கல்வியையும் வித்தைகளையும் முறையாக கற்றுத் தேர்ந்தான்.

இப்போது பார்த்திபன் பதினெட்டு வயது காளையாக வளர்ந்து இருந்தான். பிறைவடிவ நெற்றியும், அதில் கருநாகம் போல சுருண்டு விழும் கேசமும், கூர்மையான கண்களும், கோவை இதழ்களும், அரும்பு மீசையும், உருண்டு திரண்டு இருந்த தோள்களும், நிமிர்ந்த முதுகும், பரந்து விரிந்த மார்பும் அவனுக்கு கம்பீரத்தை கொடுத்திருந்தன. அவனுடைய அறிவுத் திறமையையும், கூர்மையான மதிநுட்பத்தையும் பார்த்து குருநாதரே வியந்துபோனதுண்டு.

பார்த்திபன் காட்டுக்கு வேட்டைக்குச் சென்றால் மற்ற இளவரசர் களைப் போல சேனை, தாரை தப்பட்டைகளுடன் செல்லமாட்டான். தனி ஒரு ஆளாக காட்டுக்குள் சென்று வேட்டையாடி வருவான். வேட்டைக்குச் சென்றுவிட்டு என்றைக்கும் வெறுங்கையுடன் திரும்பியதும் இல்லை. அப்படிப்பட்ட ஒரு வீர பராக்கிரமனாக மன்னர் சேதுபதி அவனை வளர்த்திருந்தார்.

பார்த்திபன் தாயை இழந்தாலும், சுந்தரவல்லியைத்தான் இதுவரை அம்மா என்று அழைத்து வந்தான். பூபதியை மாமா என்றே அழைத்தான். இவர்கள் இருவரின் நடவடிக்கைகள் அவனுக்கு பிடிக்கவில்லையென்றாலும் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் அவர்களிடம் பழகி வந்தான். ஏற்கனவே மன்னர் சேதுபதி ஒருநாள் பார்த்திபனை தனியாக அழைத்து சுந்தரவல்லியும் பூபதியும் நச்சுப் பாம்புகளுக்கு இணையானவர்கள். அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி சொல்லியிருந்தார். அவனும் தந்தையின் சொல்லுக்கு கட்டுப்பட்டவன் போல அவருடைய கட்டளையை ஏற்றுக் கொண்டான்.

இருந்தாலும் பார்த்திபன் அவர்கள் இருவர் மீதும் ஒரு கண் வைத்திருந்தான்.

(தொடரும்)

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. அச்சிட்டவர்: ர. பாஸ்கரன், சிண்டிகேட் ஆர்ட் பிரஸ், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

கண்டுபிடியுங்கள்!

கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இதயத்திலும் ஒரு வார்த்தை சிதறிக் கிடக்கிறது. அதை ஒழுங்குபடுத்திப் பாருங்கள் பார்ப்போம். முடியவில்லை என்றால் 65 –ம் பக்கம் வாருங்கள்.



அறிவுள்ள வணிகன்

பேராசிரியர் எ. சோதி

ஒரு நாட்டின் தலைநகரத்தில் அறிவு நிரம்பிய வணிகன் ஒருவன் இருந்தான். அங்கே யாருக்கு எந்தச் சிக்கல் ஏற்பட்டாலும் அவனிடம்தான் அறிவுரை கேட்டு வருவார்கள். அவன் என்ன சொல்கிறானோ அதன்படியே நடப்பார்கள். இதனால் தினமும் நள்ளிரவு நேரத்தில்தான் அவன் வீடு திரும்பவேண்டி இருந்தது.

பொறுத்துப் பொறுத்துப் பொறுமை இழந்தாள் அவன் மனைவி. வழக்கம் போல நள்ளிரவில் வீடு திரும்பிய கணவனைக் கோபத்துடன் வரவேற்றாள்.

"நமக்குத் திருமணம் ஆகி எத்தனை ஆண்டுகள் ஆகின்றன? வீட்டில் மனைவி இருக்கிறாள் என்ற எண்ணம் உங்களுக்கு இருக்கிறதா? என்னிடம் ஒருநாளாவது ஓய்வாக அமர்ந்து பேசியது உண்டா?" என்று கேட்டாள் அவள்.

"நான் என்ன செய்வேன்? வணிகத்தை மட்டுமா நான் கவனிக்கிறேன். நகர மக்கள் பலர் என்னிடம் அறிவுரை கேட்டு வருகிறார்கள். நான் அவர்கள் சிக்கலை விசாரித்து நல்வழி காட்ட வேண்டியுள்ளது. இதனால் நான் வீடு திரும்ப நள்ளிரவு ஆகிறது.

நீ ஏவியதைச் செய்ய நம் வீட்டில் வேலைக்காரர்கள் இல்லையா? உனக்கு என்ன குறை வைத்தேன்? ஏன் முணுமுணுக்கிறாய்?" என்று கேட்டான் அவன்.

"நீங்களும் மற்ற வணிகர்களைப் போல நேரத்திற்கு வீடு வந்தால் என்ன? மற்றவர்களுக்கு அறிவுரை சொல்வதால் நமக்கு என்ன பயன்?" என்று கேட்டாள் அவள்.

"உனக்குச் சொல்லிப் புரிய வைக்க முடியாது" என்றான் அவன்.

அந்த நகரத்தில் நிகழும் பெரிய திருவிழாவான மாரியம்மன் கோவில் திருவிழா வந்தது. கடைக்கு அன்று பலர் வந்தபடி இருந்தார்கள். நள்ளிரவு வந்தது. வீடு திரும்ப நினைத்தான் அவன்.

"ஐயா! இன்று நீங்கள் நடந்து செல்ல வேண்டாம். அதுதான் பாதுகாப்பாக இருக்கும்" என்றான் ஒரு வேலைக்காரன்.

குதிரையில் அமர்ந்த வணிகன் வீடு நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தான். ஒரு தெருவில் அவன் திரும்பும்போது எதிரே குடிகாரன் ஒருவன் வழியை மறைத்துக்கொண்டு நின்றான்.

இருட்டில் திருடன்தான் நிற்கிறான். தப்பிக்க வேண்டும் என்று நினைத்த வணிகன் குதிரையை வேகமாக விரட்டினான். குதிரை அந்தக் குடிகாரனை மிதித்துக்கொண்டு ஓடியது. அவனின் அலறல் கேட்டது.

தெருவில் எங்கும் ஆள் நடமாட்டமே இல்லை. சிறிது தூரம் சென்ற வணிகன் குதிரையில் மிதிபட்ட அவன் என்ன ஆனான் என்பதை அறிய விரும்பினான்.

குதிரையில் மிதிபட்டுக் கிடந்தவனைப் பார்த்தான் வணிகன். அவனுக்கு மூச்சே நின்றுவிடும் போல இருந்தது. இங்கே இறந்து கிடந்தது அந்நாட்டு இளவரசன்.

"ஐயோ! திருடன் என்று நினைத்து இளவரசனைக் கொன்றுவிட்டேனே. இதை அரசன் அறிந்தால் என்னையும் என் குடும்பத்தையும் அழித்துவிடுவானே. எல்லோரையும் ஆபத்திலிருந்து காப்பாற்றும் நானே ஆபத்தில் சிக்கிக்கொண்டேனே. இப்பொழுது என்ன செய்வது?" என்று சிந்தித்தான்.

இறந்து கிடந்த இளவரசனைத் தன் தோளில் தூக்கிக்கொண்டான்

அவன். குடிகாரனான இளவரசன் நாள்தோறும் மது குடிக்கும் கடையை நோக்கி நடந்தான். அவன் நினைத்தது போலவே அந்தக் கடை மூடியிருந்தது. இளவரசனின் உடலை அந்தக் கடையின் கதவில் சார்த்தி வைத்தான்.

'எப்படியோ ஆபத்தில் இருந்து தப்பிவிட்டோம்' என்று மகிழ்ந்தான் அவன். வீட்டிற்கு வந்து படுக்கையில் படுத்தான்.

சிறிது நேரம் சென்றது. யாரோ கதவைத் தட்டும் ஓசை கேட்டது. கதவைத் திறந்தான் வணிகன். அங்கே மதுக்கடைக்காரன் நடுங்கியபடி நின்றிருந்தான்.

"வணிகரே! பேராபத்தில் சிக்கி உள்ளேன். நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று அழுதான் அவன்.

"என்ன நடந்தது? சொல்லுங்கள்" என்று கேட்டான் வணிகன்.

"சின்ன இளவரசர் நன்கு குடித்து இருக்கிறார். மது மயக்கத்தில் என் கடைக் கதவில் சாய்ந்து இருக்கிறார். இதை அறியாமல் நான் கதவைத் திறந்தேன். கீழே விழுந்த இளவரசர் தலை உடைந்து அங்கேயே இறந்துவிட்டார். இது அரசருக்குத் தெரிந்தால் என்னைக் கொன்றுவிடுவார். நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். நான் இதுவரை சேர்த்து வைத்திருக்கும் தொகையை உங்களுக்குத் தருகிறேன்" என்று அழுதான்.

"கவலைப்படாதே! வழி கண்டுபிடிப்போம்" என்ற வணிகன், சின்ன இளவரசருக்கும் அமைச்சருக்கும் எப்பொழுதும் ஆகாது. இளவரசரின் உடலைத் தூக்கிச் சென்று அமைச்சரின் வீட்டுக் கதவில் சார்த்தி வைப்போம். நம் மீது யாரும் ஐயப்பட மாட்டார்கள்" என்றான்.

பிறகு இருவரும் இளவரசனின் உடலை அமைச்சரின் வீட்டிற்குத் தூக்கி வந்தனர். உள்ளே விருந்து நடந்துகொண்டிருந்தது. பிணத்தைக் கதவருகே சாத்தி வைத்துவிட்டு இருவரும் புறப்பட்டார்கள்.

"ஐயா! என்னைக் காப்பாற்றினீர்கள். இந்த உதவியை என்றும் மறக்க மாட்டேன்" என்ற மதுக்கடைக்காரன் தன் இடுப்பில் இருந்து பணப் பையை எடுத்தான். "இதில் ஆயிரம் பணம் உள்ளது. என் அன்புப் பரிசாக வைத்துக்கொள்ளுங்கள்" என்று தந்துவிட்டுச் சென்றான் அவன்.

தன் வீட்டை அடைந்த வணிகன் தூங்கத் தொடங்கினான். மீண்டும் கதவு தட்டப்பட்டது. "வணிகரே! எழுந்திருங்கள். பெரிய ஆபத்தில் சிக்கியுள்ளேன். நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்" என்ற குரல் கேட்டது.

எரிச்சலுடன் எழுந்த வணிகன் கதவைத் திறந்தான். அங்கே

அமைச்சன் நின்றிருந்தான். வணிகனின் கையில் பொற்காசுப் பையைத் திணித்தான் அவன்.

"இதில் ஐநூறு பொற்காசுகள் உள்ளன. பெற்றுக்கொள்ளுங்கள். என் வீட்டில் இன்று விருந்து நடந்தது. விருந்து முடிந்து வீட்டுக் கதவைத் திறந்தேன். குடிகாரனான இளவரசன் அங்கு நின்றுகொண்டிருந்ததை நான் கவனிக்கவில்லை. கதவு அவன்மேல் பட்டுக் கீழே விழுந்து இறந்துவிட்டான். முன்னரே இளவரசனுக்கும் எனக்கும் ஆகாது. இதை அரசர் அறிந்தால் என்னையும் என் குடும்பத்தினரையும் கொன்றுவிடுவார். நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று கெஞ்சினான்.

"அமைச்சரே! அஞ்ச வேண்டாம். நீங்கள் தப்பிக்க நல்ல வழி கண்டுபிடிக்கிறேன்" என்றான் வணிகன்.

அமைச்சனுடன் சென்ற அவன் இளவரசனின் உடலைப் பார்த்தான். "அமைச்சரே! இந்த உடலை நாம் அரண்மனைக்குத் தூக்கிச் செல்ல வேண்டும்" என்றான். இருவரும் அந்த உடலைத் தூக்கிக்கொண்டு அரண்மனையை அடைந்தார்கள்.

அப்பொழுது அரண்மனையில் கோலாகலமாக விருந்து

நடந்துகொண்டிருந்தது. இருவரும் கதவருகே இளவரசனின் உடலைச் சாய்த்து வைத்தனர்.

"அமைச்சரே! இனி அஞ்ச வேண்டாம். நீங்கள் செல்லலாம்" என்றான் வணிகன். வணிகனுக்கு நன்றி கூறிவிட்டு அமைச்சன் புறப்பட்டான்.

மகிழ்ச்சியுடன் தன் வீட்டை அடைந்த வணிகன் தூங்கத் தொடங்கினான். சிறிது நேரத்தில் மீண்டும் கதவு தட்டப்பட்டது. "அரசரின் கட்டளை. கதவைத் திற" என்ற குரல் கேட்டது.

உண்மை வெளிப்பட்டுவிட்டதோ என்ற நடுக்கத்துடன் கதவைத் திறந்தான் வணிகன். அங்கிருந்த வீரர்கள், "அரசர் உங்களை உடனே அழைத்துவரச் சொன்னார்" என்றார்கள்.

அவர்களுடன் அரண்மனையை அடைந்தான் வணிகன். அங்கே அரசனும் அரசியும் அழுதபடி இருந்தார்கள். அவர்கள் எதிரில் இளவரசனின் உடல் இருந்தது.

வணிகனைப் பார்த்து அரசன், "என் நாட்டிலேயே சிறந்த அறிவுடையவர் நீர்தான். குடிகாரனும் தீயவனுமான சின்ன மகனால் என் பெயர் மிகவும் கெட்டுவிட்டது. இன்று இரவு விருந்து நடந்தபோது பலரும் அவனைப் பற்றிக் குறை சொன்னார்கள். கோபத்துடன் அரண்மனைக் கதவைத் திறந்தேன். நன்கு குடித்துவிட்டுத் தள்ளாடியபடி நின்றிருந்த இளவரசன் கீழே விழுந்து இறந்துவிட்டான்.

நானே என் மகனைக் கொன்ற செய்தி பரவுமானால் என்னை இழிவாகப் பேசுவார்கள். என் புகழ் மங்கும். இளவரசன் இயற்கையாக இறந்தது போல இருக்க வேண்டும். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? உங்கள் அறிவுரை என்ன? சொல்லுங்கள்" என்று கேட்டான்.

"அரசே! முரசு அடிப்பவனை இந்த நள்ளிரவு நேரத்தில் அழையுங்கள். 'இளவரசனைப் பாம்பு கடித்துவிட்டது. உயிரைக் காப்பாற்ற மருத்துவர்கள் முயற்சி செய்கிறார்கள்' என்று நகரெங்கும் செய்தி அறிவிக்கச் சொல்லுங்கள். காலையில் மீண்டும் முரசு அடிப்பவனை அனுப்பி 'இளவரசர் இறந்துவிட்டார்' என்ற சோகச் செய்தியைத் தெரியப்படுத்தச் சொல்லுங்கள்" என்று வழிமுறைகளைச் சொன்னான் வணிகன்.

விலை உயர்ந்த முத்து மாலையை வணிகனுக்குப் பரிசாகத் தந்தான் அரசன்.

நடந்ததை எல்லாம் அறிந்தாள் வணிகனின் மனைவி. ஒரே நாள் இரவில் தன் கணவர் ஈட்டிய பொருள்களைப் பார்த்தாள். அதன்பிறகு அவனைக் குறை சொல்வதை விட்டுவிட்டாள். ★

இலவசம்

அன்பார்ந்த மாணவ — மாணவிகளே! இந்த இதழோடு, நோட்டு புத்தகங்களில் ஒட்டும் வண்ண லேபில்களை நீங்கள் இலவசமாக பெற்றீர்கள். அதேபோல அடுத்த "ராணி காமிக்ஸ்" (16—6—98) இதழோடு பள்ளி கால அட்டவணை உங்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

எனவே உங்கள் "ராணி காமிக்சு" க்கு இப்பொழுதே கடைக்காரரிடம் சொல்லி வையுங்கள்! இலவசமாக வண்ண கால அட்டவணையைப் பெறுங்கள்.

குரங்குக்கு பாலம்!

தைவானில் உள்ள தேசியப் பூங்காவில் ஏராளமான குரங்குகள் உள்ளன. அந்தப் பூங்காவுக்கு அருகில் ஒரு தேசிய நெடுஞ்சாலை இருக்கிறது. பூங்காவில் உள்ள குரங்குகள் திடீரென்று சாலையில் புகுந்து குறுக்கும் நெடுக்குமாக ஓடுகின்றன. இதனால் போக்கு வரத்திற்கு பெரிய பாதிப்பு உண்டாகிறது.

இதை தவிர்ப்பதற்காக தைவான் அரசாங்கம் ஒரு புதிய ஏற்பாடு செய்திருக்கிறது. அதாவது குரங்கு கள் சாலைகளை கடப்பதற்காக ஒரு புதிய பாலத்தை கட்டியிருக் கிறது. அந்த பாலத்தில் செல்ல குரங்குகளை பழக்குவதற்காக முதலில் பாலத்தின் மீது பழங்கள் வைக்கப்பட்டன. பழத்தினால் கவரப்பட்ட குரங்குகள் இப்போது அந்த பாலத்தை பயன்படுத்தத் தொடங்கிவிட்டன. மிருகங்கள் சாலையை கடப்பதற்கு கட்டப் பட்ட முதல் பாலம் இதுவாகத் தான் இருக்கும்.

59-ம் பக்க புதிருக்கு விடை:-

1. முதல் மாணவன்
2. குற்றால அருவி
3. வேடந்தாங்கல்
4. பேரறிஞர் அண்ணா
5. வால்டர் தேவாரம்

முகமூடிவீரர் மாயாவி தோன்றும்

தங்கமலை இரகசியம்

காட்டில் இருக்கும் தங்கங்களை அள்ளிச் செல்ல முயலுகிறது ஒரு கூட்டம். மாயாவி விடுவாரா?

பரபரப்பான மர்மக் கதை!

ஜுன் 16 "ராணி காமிக்ஸ்" இதழில் வெளிவருகிறது!

படிக்கத் தவறாதீர்கள்!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.